[2021 பிப்ரவரி 27

(ஈஉ) மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.409,76,71,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.16,25,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஈஊ) மானியக் கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2021 பிப்ரவரி 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.392,25,09,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.45,95,57,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

பிற்பகல் 1–00

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்*